# JAN DHAN SHIKSHA -I



*Lessons | Ideas | Resources*

PRADHAN MANTRI JAN-DHAN YOJANA
MERA KHATA BHAGYA VIDHATA

## அவசர நிலை

நோய், விபத்து, மரணம்
போன்ற எதிர்பாராத செலவுகள்





## எதிர்கால தேவைகள்

சேமிப்பின் மூலம் ,
இன்று வாங்க
இயலாதவற்றை,
வருங்காலத்தில் வாங்க
இயலும்.

# சேமிப்பு ஏன் தேவை?



## நீண்டகால செலவுகள்

வீடு வாங்குவது, திருமணம்,
கல்வி போன்ற செலவுகளை
சந்திக்க

# வீட்டில் பணம் வைத்திருப்பதில் சிக்கல்கள்



### பாதுகாப்பற்ற நிலை

பணம் திருடப்பட அல்லது இயற்கை சீற்றங்களால் இழக்க வாய்ப்புள்ளது



### வளர்ச்சி வாய்ப்பு இழப்பு

வட்டி வருமானம் இழப்பு



### கடன் தகுதி இழப்பு

வங்கி கடன் தகுதி அற்ற நிலை உருவாகுகிறது.

# வங்கி ஏன் தேவை?


பணம் பாதுகாக்கப்படுகிறது
சீட்டு கட்டுவதில் உள்ள ஆபத்தை தடுக்கிறது
சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கிறது
வங்கி
கடன்கள்
வட்டி வருவாய் ஈட்ட
காசோலை, டி.டி. பயன்படுத்தி பணம் அனுப்ப உதவுகிறது

# கணக்கு துவங்க தேவைப்படும் ஆவணங்கள்

## உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் (KYC): <u>புகைப்பட அடையாள அட்டை, முகவரி சான்று, புகைப்படம்</u>

### அதிகாரப்பூர்வமாக செல்லுபடியாகும் ஆவணங்கள் (Photo Id/Address Proof)





















**அதிகாரப்பூர்வ ஆவணங்களும் இல்லாத பட்சத்தில்** சமீபத்திய புகைப்படம் மற்றும் சில நிபந்தனைகளின் கீழ் வங்கி அதிகாரி முன்னிலையில் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகை இட்டு சிறிய கணக்குகள் <u>**(Small Accounts)**</u> திறந்து கொள்ளலாம். -

புதிய KYC சார்ந்த ஆவணங்களை சிறிய கணக்குகள் வைத்திருப்போர் 18 வயது அடைந்த பின்னர் சமர்ப்பிக்க வேண்டும்



# வங்கி சேவைகள்

## ஏ.டி.எம் டெபிட் கார்டு
## RuPay டெபிட் கார்டு




**மைக்ரோ ஏடிஎம் / கடவுச்சொல், தானியங்கி பணம் எந்திரம் (ATM) / விற்பனை மையம் (POS) / PIN மூலம் பணம் எடுக்க ரூபே டெபிட் கார்டு உபயோகிக்கலாம்..**

# வங்கி சேவைகள்







**தொடர் வைப்பு கணக்கு**

மாதாந்திர சேமிப்பு, ஆர்.டி. கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டி, சேமிப்பு கணக்கை விட அதிகமானது

**சேமிப்பு வங்கி கணக்கு**
**(அடிப்படை வங்கி சேமிப்பு கணக்கு)**

எளிதான பரிவர்த்தனை, வைப்பு கணக்குகள், பாஸ்புக், காசோலை மற்றும் வங்கி வரைவோலை பெறலாம்

**நீண்ட கால வைப்புத் தொகை**

- சேமிப்பு காலம் 7 நாட்களில் இருந்து 10 ஆண்டுகள் வரை உள்ளது .

# வங்கி சேவைகள்



## கல்விக் கடன்

இந்தியாவில் உயர் கல்வி / தொழிற்கல்வி படிக்க அதிகபட்சம் ரூ. 10 லட்சம் மற்றும் வெளிநாடுகளில் சென்று படிக்க ரூ 20 லட்சம் அல்லது அதற்கு மேலும் அளிக்கப்படும்



## மிகைப்பற்றுகள்

தகுதியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட அளவில் மிகைப்பற்றுக் கடன் பெற முடியும்.

**உங்களுக்கு தெரியுமா?**
மாணவர்கள் கல்விக்கடன் விண்ணப்பத்தை வித்யாலட்சுமி இணையதளத்தில் பதிவு செய்யலாம் இதன் மூலம் விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை தெரிந்து கொள்ளலாம்.

VIDYA LAKSHMI
Fulfilling Educational Aspirations

உண்மை: -
வங்கி கடன்கள் மீதான வட்டி விகிதம் அடகு கடைக்காரரை விட மிகவும் குறைவாக உள்ளது. ஒரு அடகு கடைக்காரர் 3% வட்டி விகிதம் குறிப்பிடுகிறார் என்றால் அது ஒரு வருடத்திற்கு 36% அர்த்தம் ஆகும் அதே சமயம் ஒரு வங்கி 12% வட்டி விகிதம் குறிப்பிடுகிறது என்றால், அது ஒரு வருடத்திற்கு 12% ஆகும்.

# வங்கி காசோலை/ வரைவோலை




காசோலை




வரைவோலை

| வட்டமிடப் பட்ட எண் | விவரங்கள் | காசோலையில் எழுத வேண்டியவை |
|---|---|---|
| 01 | Pay (யாருக்கு பணம் பணம் தர வேண்டுமோ அவருடைய பெயர்) | ரமேஷ் K.N |
| 02 | தேதி (பணம் தரப்பட வேண்டிய தேதி) | 31-03-1999 |
| 03 | ரூபாய் (தர வேண்டிய தொகை - எழுத்தால் ) | ஒரு ஆயிரம் மட்டும் |
| 04 | ரூபாய் (தர வேண்டிய தொகை - எண்ணால் ) | 1000 |
| 05 | காசோலை தருபவரின் கையொப்பம் | கையொப்பம் (வங்கிக் கோப்புகளில் உள்ளபடி ) |
| 06 | கணக்கு எண் | 1198 |
| 07 | வங்கிக் கிளையின் முகவரி | பப்ளிக் யுடிலிட்டி பில்டிங் கிளை பெங்களூர் |
| 08 | காசோலை எண் | 665078 |
| 09 | பணம் தரும் முறை | வங்கிக்கணக்கில் வரவு |

# இந்திய ரூபாய்




ஒரு ரூபாய் நாணயம்




ஒரு ரூபாய் தாள்




பத்து ரூபாய் தாள்

அறிந்து கொள்ளுங்கள் !

10 ரூபாய் மற்றும் அதற்கு மேலே உள்ள ரூபாய்தாள்களில் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் கையெழுத்து காணப்படும், ஒரு ரூபாய்தாளில் நிதித் துறை செயலாளர் கையெழுத்து காணப்படும், நிதி அமைச்சகம், இந்திய அரசு நாணயங்களை வழங்குகிறது.

# வங்கி சேவை வழிமுறை - I




## ஏ.டி.எம்

ஏடிஎம் அட்டை / RuPay அட்டை மூலம் பணம் எடுக்க உதவுகிறது



## வங்கி வணிகத் தொடர்பாளர் மூலம் மைக்ரோ ஏடிஎம் சேவை

வங்கி கணக்கு துவங்க, வங்கி கணக்கு வைப்பு அறிக்கை, நிதி மாற்றம் , காப்பீடு திட்டம்.






## வங்கி கிளை

அனைத்து சேவைகள்



## POS இயந்திரம்

வணிகம் செய்ய மற்றும் வரையறுக்கப்பட்ட அளவில் பணம் பெற

# வங்கி சேவை வழிமுறை - II

**தேசிய மின்னணு நிதி மாற்றம் (NEFT)**

இருவேறுபட்ட வங்கிக்குள் பண பரிவர்த்தனைகள் செய்ய

**நிகழ்நேர மொத்த பரிமாற்றம் (RTGS)**

ரூ 2 லட்சம் மற்றும் அதற்கு மேல் பரிமாற்றம் செய்ய

**மொபைல் பேங்கிங்**

நிதி மாற்றம், IMPS, பில் கட்டணம்






**இணையதள வங்கி சேவை**

நிதி மாற்றம், பில் கட்டணம் , ஆன்லைன் ஷாப்பிங், டிக்கெட் முன்பதிவு




**மொபைல் பணப்பைகள் / கைபேசி பணப்பைகள்**



மொபைல் அடிப்படையிலான மெய்நிகர் பணப்பை/கணக்கு, குறிப்பிட்ட அளவு ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் பரிவர்த்தனைகள் செய்ய

# பிரதம மந்திரியின் மக்கள் நிதி திட்டம்

- பிரதம மந்திரியின் மக்கள் நிதி திட்டம்- PMJDY ஆகஸ்ட் 28 , 2014 அன்று மாண்புமிகு பிரதமரால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தின் மூலம் கிராமம் மற்றும் நகரத்தில் உள்ள எல்லா குடும்பத்திற்கும் வங்கிக் கணக்கு துவங்க வழிவகை செய்கிறது.
- இத்துடன் வழங்கப்படும் ரூபே டெபிட் கார்டுக்கு விபத்துக் காப்பீடாக ரூ 1 லட்சம் வழங்கப்படும்.
- மிகைப்பற்று வசதி ரூ. 5000/- வரை
- மிகைப்பற்று வசதி - ரூ .5000/- வரை - குடும்பத்தில் ஒருவருக்கு 6 மாதம் திருப்தியான பண பரிவர்த்தனைக்கு பிறகு வழங்கப்படும்.

# பிரதம மந்திரியின் முத்ரா திட்டம் (PMMY)

- மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொழில் அபிவிருத்தி வங்கிக்கு (SIDBI) துணையாக குறு சிறு நிறுவனங்களுக்கான முத்ரா கடன் திட்டத்தை 08.04.2015 அன்று துவங்கினார்கள்.

- இதன் மூலம் குறு சிறு நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின் மூலம் சிறிய அளவிலான உற்பத்தி நிறுவனங்கள்,வணிகர்கள்,பழங்கள் / காய்கறி வணிகர்கள்,வாடகை வண்டி நிறுவனங்கள்,சிறிய நிறுவனங்கள், கைவினை கலைஞர்கள் மற்றும் சாலையோர வணிகர்கள் போன்றவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

## முத்ரா நோக்கம்

- ஒருங்கிணைந்த முறையில் நிதி மற்றும் இதர நிதி சார்ந்த சேவைகளை அளிப்பதன் மூலம் சமூதாயத்தின் அடித்தட்டில் உள்ள மக்களின் விரிவான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு வித்திடுதல்.

## முத்ரா குறிக்கோள்

- ஒருங்கிணைந்த, நிலையான, தொழில் முனைவோருக்கான கலாச்சாரத்தை எங்கள் பங்குதாரரர் நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்கி பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவது ஆகும்.

## முத்ரா தேவை

ஆதரவு நிறுவனங்களை ஊக்குவித்து,சிறு குறு நிறுவனங்களுக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துதல்

# கடன் திட்டத்தின் பிரிவுகள்

**சிசு**

ரூ50,000/- வரை

**கிஷோர்**

ரூ50,000 முதல் ரூ5.00 லட்சம் - வரை –

**தருண்**

Rs.5 லட்சம் முதல் - 10 லட்சம் வரை

அடமானம் தேவை இல்லை

சிசு கடன் திட்டத்தில் ப்ராசசிங் கட்டணம் இல்லை & பங்குத் தொகை தேவை இல்லை







எந்த ஒரு இந்தியரும் விவசாயம் தவிர்த்து உற்பத்தி,பதப்படுத்துதல், வியாபாரம், சேவை துறை போன்றவற்றில் தொழில் தொடங்க விரும்பினால் இத்திட்டத்தின் கீழ் ரூ 10,00,000 வரை கடன் வாங்கலாம்.

முத்ரா அட்டை என்பது மூலதன கடனை ஏ டி எம் ,வங்கி வங்கி வணிகத் தொடர்பாளர், POS எந்திரம் மூலம் பணம் பெற உதவும் ரூபே அட்டை ஆகும்.

# முத்ரா கடன் எவ்வாறு பெறலாம் ?




மேலும் தகவல்களுக்கு அருகிலுள்ள வங்கிக் கிளையை அணுகலாம் அல்லது www.mudra.org.in இணையதளத்தில் பெறலாம்.

# அடுத்த நாள் செயல்பாடுகள்

**செயல்பாடு:**

வங்கியின் அடிப்படை செயல்பாடுகளை அறிந்து கொள்ள உங்கள் வங்கி மேலாளரை அணுகவும். அவர் அளித்த தகவல்களை வைத்து ஒரு சிறிய குறுநாடகம் மற்றும் அத்தலைப்புகளில் விவாதிக்கவும்.

## மாதிரி கதாபாத்திரங்கள்



வங்கி மேலாளர்



வாடிக்கையாளர்கள்



வங்கி அதிகாரி




காசாளர்



வங்கி வணிகத்தொடர்பாளர்

மாதிரி குறுநாடகம் : 2 முதல் 3 மாணவர்கள் ஒரு குழுவாக அமைத்து,வங்கிக் கணக்கு துவங்குவத்தின் அவசியம் குறித்து விவாதிக்கவும். ஒருவர் வங்கியில் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு பணம் எடுக்கும் படிவத்தை பூர்த்தி செய்து காசாளரிடம் அளிக்கவும்,மேலும் கல்வி கடன் சம்பந்தமான விவரங்களை அவரிடம் கேட்பது போல் நடிக்கவும்.

Assign Roles to Students -> Create Script with them -> Perform the 10-15 min skit in the Next Session

# 2 ம் நாள்

# காப்புறுதி

## எதிர்கால பாதுகாப்பு




சந்தாதாரர், சந்தா தொகையை காப்பீடு நிறுவனத்தின் சந்தாதாரருக்கு விபத்தின் போதோ அல்லது இறப்பின் போதோ இழப்பீடு வழங்குவதை உறுதி அளிக்கிறது.
இதே முறையில் அசையும் அல்லது அசையா சொத்து இழப்பின்போதும் உறுதி அளிக்கிறது.

ஆயுள் காப்பீடு

சொத்துக் காப்பீடு







# சமூக பாதுகாப்பு திட்டங்கள்

## Pradhan Mantri Suraksha Bima Yojana

- விபத்தில் மரணம் அல்லது இயலாமை ஏற்பட்டால்
- விபத்து காப்பீடு திட்டம் ரூ 2.00 இலட்சம் வரை உண்டு
- 18 வயது முதல் 70 வரை வங்கி சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவரும் தகுதியுடையவர்கள்
- வருடத்திற்கு பிரீமியம் ரூ.12 / செலுத்த வேண்டும்.

## Pradhan Mantri Jeevan Jyoti Bima Yojana

- மரணம் அடைந்தால் PMJJBY திட்டத்தின் மூலம் ரூபாய் 2.00 இலட்சம் வரை ஆயுள் காப்பீடு காப்பீட்டு அளிக்கிறது.
- 18 முதல் 50 ஆண்டுக ள் வயது உள்ள ,சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் அனைவரும் தகுதியுடையவர்கள்
- வருடத்திற்கு பிரீமியம் Rs.330.

## Atal Pension Yojana

18 வயது முதல் 40 வரை உள்ளவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்தால் ரூ 1000 முதல் ரூ 5000 வரை ஓய்வூதியமாக பெறலாம்.

# ஓய்வூதிய மற்றும் பொது வருங்கால நிதி (PPF)



## ஓய்வூதியம்

ஓய்விற்குப் பிறகு வரும் செலவுகளுக்கு தற்போது சேமித்தல்.



## பொது வருங்கால சேமிப்பு (PPF)

பொது வருங்கால சேமிப்பு மற்றும் வரி சலுகை.

இத்திட்டத்தில் சேமிப்பின் மூலம் வருமானத்துடன் கூடிய வரிச் சலுகையும் பெறலாம்.

விரைவு சோதனை:
உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டியிடம் அவர்கள் ஓய்வூதிய திட்டத்தை பற்றி கேட்கவும்..

# குழு நடவடிக்கை

# தேர்வு

# பரிசுகள்


நன்றி